

கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் சிவகங்கை நகர், மன்னர் மேல்நிலைப்பள்ளியில், சிவகங்கை மாவட்ட நிர்வாகம், பள்ளிக் கல்வித்துறை, பொது நூலக இயக்ககம் மற்றும் பபாசி இணைந்து நடத்தும், 4வது புத்தகத் திருவிழாவினை திறந்து வைத்து, பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் மாநில அளவிலான நடைபெற்ற கலைத்திருவிழா போட்டியில் கலந்துகொண்டு, கலையரசி பட்டம் வென்று சாதனை படைத்த, கோட்டையூர் சிதம்பரம் செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி மு.லேனாவிற்கு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், தனது சொந்த நிதியிலிருந்து ரூ.5,000 ஊக்கத்தொகையினையும் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித், , சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார் (மானாமதுரை) மற்றும் எஸ்.மாங்குடி (காரைக்குடி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி கா.வானதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) ரமேஷ், திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கைமாறன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலுமுத்து, தென்னந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்க செயலாளர் எஸ்.கே.முருகன் உட்பட பலர் உள்ளனர்.



சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு விழாவில் 200 கர்ப்பிணிப் பெண்களுக்கு சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் வளைகாப்பு நடத்திவைத்து, சீர்வரிசைகள் வழங்கி உரையாற்றினார். நிகழ்வின் இறுதியில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஐந்து வகை உணவுகள் பரிமாறப்பட்டன. உடன் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) செல்வி. ஐஸ்வர்யா, கோட்டாட்சியர் பிரபு, மாவட்ட திட்ட அலுவலர் (பொறுப்பு) திருமதி. காயத்ரி, மாவட்ட சமூகநல அலுவலர் செல்வி. பிரேமலதா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் திருமதி. ரூபி மற்றும் மாநகர தி.மு.க. செயலாளர் ஆனந்தசேகரன், துணை மேயர் திருமதி. ஜெனிட்டா செல்வராஜ், மாநகராட்சி வடக்கு மண்டல தலைவர் நிர்மல்ராஜ், பகுதி செயலாளர் ஜெயக்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜாக்குலின் ஜெயா, மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி. கவிதா தேவி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### க.தேவராஜி எம்.எல்.ஏ. - சி.என்.அண்ணாதுரை எம்.பி., சிறப்புரை!

# திருப்பத்தூர் மேற்கு ஒன்றியத்தில் முதல்வர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவோம்!

## ஒன்றியக் கூட்டத்தில் தீர்மானம்! அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ஏற்பாடு!

திருப்பத்தூர், பிப். 25-

திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி,திருப்பத்தூர் மேற்கு ஒன்றியம் கழகத்தலைவர் அவர்களின் பிறந்தநாளை சிறப்பாக கொண்டாட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகத்தலைவர் மு.க. மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்படி திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.நல்லதம்பி எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் திருப்பத்தூர் மேற்கு ஒன்றியத்தில் அவைத்தலைவர் சி.சின்னதம்பி தலைமையில் ஒன்றிய நிர்வாகிகள் முன்னிலையில் கழக செயற்குழு உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது.


இதில் இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்கள தேவராஜி மாவட்ட கழக செயலாளர், சி.என். அண்ணா துரை திருவண்ணா மலை நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இதில், கழகத்தலைவர் அவர்களின் 72வது பிறந்த நாளில் ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் கிளை நிர்வாகிகளை ஒன்றிணைத்து ஆங்காங்கே கழகத்தின் இருவண்ணக் கொடியேற்றி இனிப்பு வழங்கி நலதிட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவதெனவும்

இனம் காக்கும் தமிழ் நாட்டில்பேரறிஞர்அண்ணா தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் வழியில் கழகத்தலைவர் அவர்கள் தலைமையில் மத்திய பாசிச மதவாத அரசின் இந்தித் திணிப்பை வன்மையாக கண்டித்தும்,

மத்திய பட்ஜெட்டில் நிதி ஒதுக்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை தமிழ்மக்களை வஞ்சிக்கும் மதவாத மோடி அரசினை கண்டித்தும் இளையதலைவர் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் தலைமையின் கீழ் அதிகமாக இளைஞர்களை குக்கிராமம் தோறும் புதிய உறுப்பினர்களை சேர்த்து கழகத்தை வலுப்படுத்த இக்கூட்டத்தில் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகள், சி.கே.சின்னதம்பி, சி.கழகரசு, எ.விஜயா, எம்.ராஜேந்திரன், எல்.சிவலிங்கம்,எஸ்.சரவணன், வி.செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர். மாவட்ட பொருளாளர். கே.பி.ஆர். ஜோதிராஜன், பொதுக்குழு உறுப்பினர்கள்.சு. அரசு, ஒன்றிய செயலாளர்கள். க. முருகேசன், கே.எஸ்.எ.மோகன்ராஜ், ஒன்றியக்குழு தலைவர். விஜயா, துணை சேர்மென். டி.ஆர்.ஞானசேகரன், வி. அன்பழகன், ஆர். தசரதன், எம்.ஜி.ராமச்சந்திரன், எஸ். சி.விஜயகுமார், எஸ். பி.அண்ணாதுரை, அருள் நிதி, உள்ளாட்சி பிரதிநிதிகள், துணை அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் திரளாக கலந்து கொண்டு இக்கூட்டத்தை சிறப்பித்தனர். இறுதியில் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எ. ஆதித்யா நன்றியுரையாற்றினார்.




# சிவகங்கையில் 4-வது புத்தகக்கண்காட்சி திருவிழா !

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை,பிப்.25-

தமிழக முதல்வர், தளபதி அவர்கள் மூதல்வராக பொறுப்பு ஏற்ற ஆண்டிலிருந்து ஒவ்வொரு மாவட்டங்களிலும் புத்தக கண்காட்சிநடைபெறவேண்டும் என்று உத்திரவிட்டார். மாவட்டம் தோறும் நடைபெறும் இந்த புத்தக கண்காட்சி திருவிழா போன்று பொதுமக்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்களிடையே நல்ல வரவேற்பினை பெற்றுள்ளது.

அதன்படி சிவகங்கை மாவட்டத்தில் நான்காவது ஆண்டு புத்தகத்திருவிழாவினை சிவகங்கை மாவட்ட நிர்வாகம், பள்ளிக்கல்வித்துறை பொது நூலக இயக்ககம் மற்றும் பப்பாசி ஆகியோர் சிவகங்கை மன்னர் மேல்நிலைப்பள்ளியில் நடத்தும் புத்தகத் திருவிழாவினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா ஆஜித் தலைமை வகித்தார். எம்.எல். ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ்.மாங் குடி ஆகியோர் முன்னிலையில் நடை பெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் செல்வ சுரபி வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் சிவகங்கை தமிழ்ச்சங்க நிறுவனர் ஜவஹர் கிருஷ்ணன் எழுதிய குன்றக்குடி அடிகளார் எடுக்கிற 100 என்ற நூலினையும், திருக்குறளை கவிதை வடிவில் முனைவர் இரா முருகேஸ்வரி எழுதிய இருவரி அறநெறி என்ற நூலினை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வெளியிட்டார். மாநில அளவில் நடைபெற்ற கலைத்துறை போட்டி களில்தொடர்ந்து மூன்றாம் ஆண்டாக பரிசு பெற்று வரும் கோட்டையூர் சிதம்பரம் செட்டியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி கலையரசி பட்டம் பெற்ற மாணவி லேனா ஆகியோரை பாராட்டி தனது சொந்த நீதியிலிருந்து ருபாய் 5000 வழங்கி பாராட்டினார்.

மாவட்ட திட்ட அலுவலர் திருமதி வானதி நன்றி கூறினார். இந்த நிகழ்ச்சியில் திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த. சேங்கைமாறன், மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்,பொது முத்துக்கழுவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வளர்ச்சி ரமேஷ் ஊராட்சிகள் உதவி இயக்குனர் கேசவதாசன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலு முத்து கோட்டாட்சியர் விஜயகுமார் நகர்மன்ற துணைத் தலைவர் கார் கண்ணன் உட்பட பள்ளி மாணவ மாணவிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். மதுரை வீ.ராமகிருஷ்ணன் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற தலைப்பிலும், புலவர் ஜெயங்கொண்டான் திருக்குறளோடு நாம் என்ற தலைப்பிலும், மக்கள் கவிஞர்அரு. நாகப்பன் தலைமையில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி பேராசிரியர் கு. ஞானசம்பந்தம் தலைமையில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. மூன்றாம் நாள் நிகழ்ச்சியாக பேராசிரியர் சாலமன் பாப்பையா தலைமையில் வாழ்க்கையில் உயர்வு பெற பெரிதும் உதவுவது கல்வியே, செல்வமே என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் பட்டிமன்ற பேச்சாளர்கள் ராஜா, திருமதி ரேவதி சுப்புலட்சுமி, திருமதி கவிதா ஜவகர் டாக்டர் அன்புநாதன் ஆகியோர் கலந்து கொண்டு வாதிட்டார்கள்.

புத்தக கண்காட்சியில் 90 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது பொது நூலக துறையின் சார்பில் 12 அரங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளது. வருகிற மார்ச் இரண்டாம் தேதி வரை புத்தகக் கண்காட்சி நடைபெறுகின்றது.

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் சிறப்புரை

# தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா அறிக்கை!



தென்காசி.பிப்.25.

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க.செயல்வீரர்கள் கூட்டம் இன்று (25ஆம் தேதி) நடைபெறுகிறது. இதில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார். என தென்காசிவடக்குமாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது.

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க செயல்வீரர்கள் கூட்டம் இன்று (25ஆம் தேதி - செவ்வாய் கிழமை) காலை 10:30 மணி அளவில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் கோ.பத்மநாபன் தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தங்கவேலு, சீனிவாசன், பரமகுரு, தீர்மானக்குழு உறுப்பினர் சரவணன், மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச் செல்வி, மாவட்ட பொருளாளர் சரவணன் துணைச் செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா, பொதுக்குழு உறுப்பினர்கள் வேல்சாமிபாண்டியன், தேவதாஸ், சாகுல் ஹமீது, பராசக்தி, மகேஸ்வரி,மாரிசாமி,பி.மாரிச்சாமி,

ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன், பொன் முத்தையா பாண்டியன்,கடற்கரை,பூசைப் பாண்டியன்,சேர்மத்துரை, கிறிஸ்டோபர், பெரியதுரை,ராமச்சந்திரன், வெள்ளத்துரை,பால்ராஜ்,குணசேகரன், நகர செயலாளர்கள் அந்தோணிசாமி, பிரகாஷ், பேரூர் செயலாளர்கள் குருசாமி,ரூபி பாலசுப்பிரமணியன், மாரிமுத்து,சேது சுப்பிரமணியன் உட்பட அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்,கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# வில்லியனூர் தொகுதி வளர்ச்சிப் பணிகள்!

## எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் நேரில் ஆய்வு!

புதுச்சேரி, பிப். 25-

வில்லியனூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை குறித்து மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவாவுடன் இணைந்து நேரில் ஆய்வு செய்தார்.

வில்லியனூர் சட்டமன்ற தொகுதி, ஜி.என். பாளையம் கிராம பஞ்சாயத்திற்கு உட்பட்ட எழில் நகரையும், அரும்பார்த்தபுரம் திருக்குறளார் நகரையும் இணைத்து சாலை அமைத்துக் கொடுக்க வேண்டும். இதற்கு இடையில் உள்ள 400 சதுர அடி இடம் தனி நபருக்கு சொந்தமாக உள்ளதை அரசு சார்பில் பெற்றுக்கொடுத்து சாலை வசதி ஏற்படுத்திக் கொடுத்தால் ஜி.என். பாளையம், சுல்தான் பேட்டை, வெண்ணி சாமி நகர், வெங்கடேஸ்வரா நகர், நடராஜன் நகர், வள்ளியம்மை நகர், முத்துப் பிள்ளை பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், பள்ளி, கல்லூரி செல்லும் மாணவர்களும் பயன்பெறுவார்கள் என்று அக்கிராம மக்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா கடந்த 19-ஆம் தேதி மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்திருந்தார். மேலும், வி. மணவெளி, வி. தட்டாஞ்சாவடி கிராம மக்கள் பயன்படுத்தும் மயானத்தை விரிவுபடுத்தவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதனடிப்படையில், மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா மற்றும் அதிகாரிகள் குழு எழில் நகர் - திருக்குறளார் நகரை இணைக்கும் பகுதியில் தனி நபருக்குச் சொந்தமான இடத்தை ஆய்வு செய்தார்கள். அப்போது, மக்கள் பயன்படுத்தும் இந்த சாலைக்கு தேவையான இடத்தை அரசு கையகப்படுத்தி தர உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அப்பகுதி மக்களிடம் ஆட்சியர் உறுதியளித்தார்.

தொடர்ந்து, வி.மணவெளி, வி. தட்டாஞ்சாவடி மக்கள் பயன்படுத்தும் மயானத்தை நேரில் பார்வையிட்ட ஆட்சியர் மயான விரிவாக்கம் குறித்து விரைவாக ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, வில்லியனூர் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், வட்டாட்சியர் சேகர், நகரக் குழும உறுப்பினர் செயலர் புவனேஷ்வரன், இளநிலைப் பொறியாளர் சத்திய நாராயணா மற்றும் திமுக பொதுக்குழு உறுப்பினர்கள் இராமசாமி, தர்மராஜ், தொகுதி செயலாளர் மணிகண்டன், சபரி, சுப்ரமணி, கார்த்தி, மிலிட்டரி முருகன், பாலா, வீரபத்திரன், மணி, சந்துரு, ரகுராமன், அன்பழகன், ஆறுமுகம், சுப்ரமணி, சரவணன், ராமதாஸ், வாசு, சுப்புராயலு, ஏழுமலை உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



வில்லியனூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை குறித்து மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவாவுடன் இணைந்து நேரில் ஆய்வு செய்தார்.